முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 16.02.2026

O.S No. 348/2015

பி.வா.சா.1-செல்லப்பபிள்ளை

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் பத்தாம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் தேருரில் மாவு மில் நடத்தி வருகிறேன். வழக்கு பி பட்டிகை சொத்தில் நான் என் மாவுமில் வைத்துள்ளேன். சுமார் 26 வருடமாக மாவு மில் தொழில் செய்கிறேன். வழக்கு பி பட்டிகை சொத்து என் அப்பாவின் சொத்து ஆகும் அவ்வாறு காண்பிக்கஆவணம் ஏதாவது உண்டா என்றால் அப்பாவின் பாகபிரிவினை ஆவணம் உள்ளது. எனது அப்பாவின் அம்மா மீனாட்சி அம்மா வழக்கு பி பட்டிகை சொத்தை கிரயம் வாங்கினார். கிரய ஆவண எண் எனக்கு நியாபகமில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஆகும். பி பட்டிகை சொத்தின் தெற்கு வடக்கு மேற்கில் பாதை என்றால் மேற்கு பக்கம் தார் சாலை தெற்கு பக்கம் 4 அடி பொது பாதை வடக்கு பக்கம் அழகப்பபிள்ளை சொத்து உள்ளது. கிழக்கு பக்கம் வாதியின் சொத்து.

பி.வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் நான் சொல்லியுள்ள 4 எல்லைகள் துவங்குமா என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு 3 வது பக்கத்தில் 4 எல்லைகள் வேறு வேறாக இருப்பதாக கூறுகிறார். தெற்கு பக்கம் 4 அடி பொது பாதை மேற்கு பக்கம் பி பட்டிகை சொத்திற்கும் தார் சாலைக்குமிடையே சிறிதளவு புறம்போக்கு இடம் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் பி பட்டிகை சொத்திற்கும் புறம்போக்குக்கும் இடையே 4 அடி வீதி உள்ளது என்றால் சரி. அந்த பாதை வழியாக தான் வழக்கு எ பட்டிகை சொத்திற்கு போகமுடியும் என்றால் சரி.

பி பட்டிகை சொத்தின் மேற்கு பக்கமுள்ள 4 அடி பாதை தெற்கு பக்கமுள்ள 4 அடி பாதை வழியாக சென்று கிழக்கு பக்கம் வாதியின் வீட்டில் சென்று முடியும் என்றால் சரி.

வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வீட்டின் முன்பு கோலம் போட இடஞ்சலாக இருப்பதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது நிருபண வாக்குமூலத்தில் எ பட்டிகை பொது பாதையில் வாதிக்கு மட்டும் பாத்தியம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி அல்ல பொது பாத்தியம் ஆகும். உண்மையில் வாதி கோலம் போடுவதற்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் 4 அடி பாதையில் நான் செய்துள்ள ஆக்கிரமிப்பை அகற்ற இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றால் சரியல்ல,

எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வாதி விளம்புகை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. கிழக்கு பி பட்டிகை சொத்து வாதியின் சொத்தாகும். பிரதான சாலையில் இருந்து வழக்கு பி பட்டிகை சொத்திற்கு நேராக செல்ல முடியும் என்றால் சரி. பி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கமுள்ள 4 அடி பொது பாதையை உபயோகபடுத்த வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. தெற்கு பக்கமுள்ள கதவு ஜன்னல் போன்றவற்றை பயன்பாட்டிற்காக 4 அடி பொது பாதையை நான் பயன்படுத்தி வருகிறேன். வழக்கு பி பட்டிகை சொத்தின் தெற்கில் உள்ள கதவு ஜன்னல்கள் உள்பக்கமா திறந்து மூடுவதாக உள்ளது பாதைக்கு எந்த விதத்திலும் இடஞ்சல் இல்லை.

பி.வா.சா,ஆ 1 கிரய ஆவணத்தில் உள்ள சொத்தின் ஒரு பாகம் மட்டுமே பி பட்டிகை சொத்து என்றால் சரி. 2015 ல் புதிதாக கதவு ஜன்னல் போன்றவற்றை வழக்கு பி பட்டிகை சொத்தில் நான் அமைத்தேன் என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 கிரணம் வாங்கிய போது பி பட்டிகை சொத்தில் கட்டிடம் இருந்ததா என்றால் கட்டிடம் இருந்தது அதை இடித்து என் அப்பா 1990 ல் கட்டினார். உண்மையில் 1962 ல் கட்டிடம் இருந்ததாகவோ அதை இடித்து

என் அப்பா கட்டியதாக நான் சொல்வதற்கு ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 2015 ல் தான் இந்த புதிய கட்டிடம் வழக்கு பி பட்டிகை சொத்தில் கட்டடப்பட்டது என்றால் சரியல்ல. பழுது மட்டுமே பார்த்தேன்.

பழுது பார்த்ததாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பழுது பார்க்க ஊராட்சியின் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. வா.சா,ஆ.5 புகைப்படத்தில் 2 வது புகைப்படம் வழக்கு பி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கமுள்ள 4 அடி பாதை என்றால் சரி. அதில் உள்ள கட்டிடம் என்னுடைய மாவுமில் கட்டிடம் என்றால் சரி. அந்த புகைப்படத்தில் பழுது பார்த்ததாக இல்லை என்றாலும் புதிதாக கான்கிரிட் போட்டு கட்டப்பட்டதாக உள்ளது என்றாலும் சரியல்ல வா.சா.ஆ.5 புகைப்படம் 2015 ல் நான் பி பட்டிகை சொத்தின் கட்டிடம் கட்டியபோது எடுத்த புகைப்படம் என்றால் எனக்கு தெரியாது.

வாதிக்கு 4 அடி பாதையில் எந்தவித உரிமையும் இல்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரி. பி.வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் 4 அடி பாதை பொது பாதையாக மீனாட்சி அம்மாளுக்கும் முருகேச பிள்ளைக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளதென்றால் சரி. முருகேச பிள்ளை வாதியின் அப்பா. மீனாட்சி அம்மாளுக்கும் முருகேச பிள்ளைக்கும் பி பட்டிகை சொத்தின் மேற்கு பக்கமுள்ள பொது பாதை வழியாக தெற்கு பக்க 4 அடி பாதையில் சென்று வருவதற்கான பாதை உரிமை 1962 ல் இருந்தே கொடுக்கப்பட்டுள்ளதென்றால் சரி. 1962 ல் இருந்தே 2ம் வாதியின் அப்பா பாதையை பயன்படுத்தி வருகிறார் என்றால் சரி.

பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்யகூடாது என சரத் உள்ளது என்றால் சரி. எனது வாக்குமூலத்தில் ரோட்டை பார்த்து கேட் அமைத்ததாக சொல்லியிருப்பதில் அவ்வாறு எந்த விதமான அமைப்பும் எந்த காலத்திலும் இல்லை

என்றால் சரியல்ல. 2015 ல் புதிதாக கட்டிடம் கட்டுய போது கூரையில் ½ அடியும் பி பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் சன்சைடில் 4 அடியும் பி பட்டிகைசொத்திற்கு செல்வதற்கான படிக்கட்டுகள் 4 அடி நீளம் 4 அடி அகலத்தில் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார். அதற்காக செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரி.

ஆணையர் அறிக்கையில் நான் சொல்லியுள்ள ஆக்கிரமிப்புகளை குறிப்பிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. மீனாட்சி அம்மாள் வாரிசுகளிடம் இருந்து வாதிக்கோ அவரது முன்னுரிமையாளருக்கோ பாதை அவகாசம் கொடுக்கப்பட்வில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரி. 1962 ஆவணத்திலேயே உரிமை கொடுக்கப்பட்டுவிட்டதால் மீனாட்சி அம்மாள் வாரிசு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்புகளை இடித்து அகற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்றால் ஆக்கிரமிப்புகளால் யாருக்கும் இடஞ்சல் இல்லை அதனால் அகற்ற அவசியம் இல்லை. வாதிக்கு கஷ்டத்தை ஏற்படுத்த வேண்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்தின் தெற்கு பக்கமுள்ள வாசல் வழியாக கடைக்கு ஜாமான்கள் எடுத்து செல்லும் போது 4 அடி பாதையில் நான் வாகனத்தை நிறுத்துவதால் சரக்குகளை இறக்கி வைப்பதால் வாதியின் பாதை போக்குவரத்துக்கு இடஞ்சலாக இருக்கும் என்றால் சரியல்ல நான் அந்த வாசலை பயன்படுத்தவே இல்லை காற்றோட்டத்திற்காகவும் வாஸ்துவிற்காகவும் தெற்குபக்கமுள்ள கதவு ஜன்னல்கள் ஏற்படுத்தி உள்ளேன்.

பி.வா,சா.ஆ.8 ல் நான் குறிப்பிட்டுள்ளவாறு பி பட்டிகை சொத்து விவரங்கள் ஸ்தலத்தில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றாலும் வழக்கிற்காக தவறான

வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது வாதியின் வழக்கு செலவுதொகையுடம் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.